விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 057 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 02 சனிக்கிழமை (14.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## சிறீதரன் எம்.பிக்கு ஆதரவு தெரிவித்து
### கிளிநொச்சியில் ஒன்றுகூடல்

(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணியளவில் ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறீதரன் எம்.பியின் பாராளுமன்றக் குழுத்

04ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வின்றி நாடு முன்னேறாது
### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)


தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நாடு என்ற ரீதியில் ஒரு போதும் முன்னேற்றமடைய முடியாதென முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் வண்டெக்ஸ்ட் இன்னிஸியேட்வின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (12) நடைபெற்ற அவரது 'இலங்கையில் சமாதானப் பேச்சு

15ஆம் பக்கம் பார்க்க

### - யாழ்.நகர் பழக்கடை விவகாரம் -
# யாழ்.மாநகர சபை அமர்வில் குழப்பம்

## பிரேரணை கிழித்தெறிவு



*(யாழ்ப்பாணம்)*

யாழ். நகர் பழக்கடை விவகாரம் தொடர்பில், நேற்றைய யாழ். மாநகர சபை அமர்வில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதோடு இது தொடர்பான பிரேரணையும் கிழித்தெறியப்பட்டது.

*(04ஆம் பக்கம் பார்க்க)*

## மல்லாகம் - அழுக்கை வீதி மூடப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் சந்திக்கும் அழுக்கைச் சந்திக்கும் இடையிலான வீதி தற்காலிகமாக மூடப்படுகின்றது என யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் வே.தயாபரன்

15ஆம் பக்கம் பார்க்க

## 30 கிலோ கஞ்சா பளைப் பகுதியில் மீட்பு

(பளை)

பளை மாசார் பகுதியில் சுமார் 30 கிலோ கஞ்சா பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

14 பொதிகளில் பொதியிடப்பட்ட நிலையில் இவ்வாறு கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சாவின்

15ஆம் பக்கம் பார்க்க

## வெடுக்குநாறியில் சுதந்திரமான சிவராத்திரி தின வழிபாடு
### பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க உறுதி



(வவுனியா)

வவுனியா வடக்கு, ஒலுமடு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சைவமக்கள் சுதந்திரமாக சிவராத்திரி

15ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் சட்டத்தரணி, அவரது மனைவி பட்டப்பகலில் சுட்டுப் படுகொலை
### பாதாள குழுவைச் சேர்ந்தவருக்கு முன்னிலையானவர்



(கொழும்பு)

"கரந்தெனிய சுத்தா" எனப்படும் பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த குற்றவாளியின் நீதிமன்ற வழக்குக்காக முன்னிலையான சட்டத்தரணியும் அவரது மனைவியும்

15ஆம் பக்கம் பார்க்க



### பழக்கடை வியாபாரிகள்
## யாழ்.மாநகர சபை முன்பாகப் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

### பாடசாலைகளுக்கு
## விடுமுறை

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் நேற்று நிறைவடைந்தது.

இதன்படி, அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார்

15ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத மீன்பிடியை தடை செய்யக்கோரி
### முல்லைத்தீவு மீனவர்கள் போராட்டம்



(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடைசெய்யக் கோரி முல்லைத்தீவு

04ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 - 06 - 1932 |  | 09 - 02 - 2026 |

## " சேவைச் செம்மல் "

## வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை J.P

## (V.C.சபாரத்தினம்)

**முன்னாள் வருமான மேற்பார்வையாளர் (நெடுந்தீவு நானாட்டான் முருங்கன் பிரதேச சபை), முன்னாள் பிரதம வருமான பரிசோதகர் (யாழ்.மாநகர சபை), முன்னாள் பிரதேச சபைத் தலைவர் (நெடுந்தீவு), முன்னாள் கிராம அபிவிருத்தி சங்கச் செயலாளர் (நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு), முன்னாள் சனசமூக நிலையச் செயலாளர் (நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு), இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவு முன்னாள் தலைவர், நல்லூர் லயன்ஸ் கழக முன்னாள் உறுப்பினர், நெடுந்தீவு பல நோ.கூ.சங்க முன்னாள் இயக்குநர், நல்லை ஆதீனசபை உறுப்பினர்**

நெடுந்தீவு மேற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது இல.72, செட்டித்தெரு, நல்லூரை நிரந்திர வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த (09.02.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அபிராமிப்பிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் இளைய புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சுப்பிரமணியம், குமாரசுவாமி, பொன்னம்பலம், ஐயாத்துரை, தெய்வானைப்பிள்ளை, நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியவரதன் (தவிசாளர் - நெடுந்தீவு), நிர்மலா (முன்னாள் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்), கிருபாவரதன் (முன்னாள் பல நோ.கூ.சங்க முகாமையாளர்), கோகுலவரதன் (லண்டன்), சந்திரகலா (ஆசிரியர் - வைத்தீஸ்வராக் கல்லூரி), விஜயலதா (லண்டன்), பத்மவரதன் (கனடா), தவமேகலா (லண்டன்), பானுகலா (பிரான்ஸ்), அருள்வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மஞ்சுளா, பாக்கியலட்சுமி, சுகுந்தலாதேவி (லண்டன்), புவனேந்திரா, தருமரத்தினம் (லண்டன்), பொன்மதி (கனடா), செல்வராசா (லண்டன்), சபேசன் (பிரான்ஸ்), ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் குமரன் (மென்பொருள் பொறியியலாளர் - லண்டன்), குகப்பிரியன் (மருத்துவபீட மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்), ஜனகன் (வர்த்தகபீட மாணவன் - நொதேன் பல்கலைக்கழகம்), துவாரகன் (மருத்துவபீட மாணவன் - ஜெயவர்த்தனபுர), மகிபன் (மருத்துவபீட மாணவன் - இம்பீரியல், லண்டன்), நிருஜன் (வணிகத்துறை மாணவன் - கொவென்றி, லண்டன்), கினோஜா (மாணவி - லண்டன்), மதுசன் (மென்பொருள் பொறியியலாளர் மாணவன் - நொதேன் பல்கலைக்கழகம்), நிரோஜன் (மாணவன்), கிந்துஷன் (மாணவன்), அபியதர்சன் (மருத்துவபீட மாணவன் - அஸ்டன், லண்டன்), விட்டலன் (மாணவன் - கனடா), லக்ஷினி (மாணவி - கனடா), யனுசா (தாதியத்துறை மாணவி - லண்டன்), தனுஷா (மாணவி - லண்டன்), அனுராஜ் (மாணவன் - லண்டன்), அபிராஜ் (மாணவன், லண்டன்), பானுஷன் (விமானப் பொறியியல் மாணவன் - பிரான்ஸ்), டினோஜா (சட்டத்துறை மாணவி - பிரான்ஸ்), கபிசன் (பொறியியல் துறை மாணவன் - பிரான்ஸ்), அபிசன் (மாணவன் - பிரான்ஸ்), ஆருத் (மாணவன் - லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.72, செட்டித்தெரு,**
**நல்லூர்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் வியாபாரிகளுக்கு வழக்கு முடியும் வரை பிணை இல்லை

## ஆராய்கிறது அரசாங்கம்



(கொழும்பு)

**விசாரணை முடியும் வரை போதைப்பொருள் வியாபாரிகளை பிணை வழங்காமல் தடுத்து வைப்பதற்கான சட்டம் இயற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார துணை அமைச்சர் வழக்கறிஞர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**

மாத்தறையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் துணை அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

மேலும் பேசிய பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார துணை அமைச்சர் வழக்கறிஞர் சுனில் வட்டகல,

"இலங்கைக்கு போதைப் பொருள் வழங்குபவர்களை வழக்கு முடியும் வரை பிணை இல்லாமல் தடுத்து வைக்க முடியுமா என்பது குறித்து எங்கள் முன் விவாதிக்கப்படுகிறது. அதையும் நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துள்ளோம்.

19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் விஷச்சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இது பலப்படுத்தப்படுகிறது.

சட்ட சீர்திருத்தங்களின் அடிப்படையில் இது தொடர்பாக ஒரு பெரிய தலையீடு உள்ளது. குற்றத்தால் உருவாகும் செல்வத்தை பொலிஸார் கண்டறிய ஏற்கனவே நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி)

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ காலமானார்



(கொழும்பு)

இலங்கையின் மூத்த அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண காலமாகியுள்ளார்.

சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்த அவர், நேற்றுக்காலை அவரது இல்லத்தில் காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் தமது 91ஆவது வயதில் காலமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## அதிகரிக்கும் உடற்பருமன் ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் வயது வந்தோரில் மூன்றில் ஒரு பகுதியினர் அதிக உடல் எடை அல்லது உடற்பருமன் கொண்டவர்களாக உள்ளதாக புதிய ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது.

சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வயம்ப பல்கலைக் கழகம் இணைந்து 2024 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி ஆண்களை விட பெண்களிடையே உடற்பருமன் வீதம் சுமார் 10 சதவீதம் அதிகமாகக் காணப்படுகிறது.

சிறுவர்களிடையே இந்த பாதிப்புக் குறைவாக இருந்தாலும், சுமார் 12 சதவீத பதின்ம வயதினர் அதிக உடல் எடை கொண்டவர்களாக உள்ளனர்.

இலங்கையின் மொத்த மரணங்களில் 84 சதவீதம் நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களாலேயே ஏற்படுகின்றன.

2009 முதல் 2019 வரையான காலப்பகுதியில் நீரிழிவு தொடர்பான மரணங்கள் மற்றும் இயலாமை 34.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

இலங்கையர்களின் தவறான உணவுப் பழக்க வழக்கங்களே இந்த நிலைக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. மேலும் மக்கள் அதிகளவில் சோறு மற்றும் மாப் பொருள் சார்ந்த உணவுகளையே உட்கொள்கின்றனர்.

உலக சுகாதார ஸ்தாபானம் பரிந்துரைத்த அளவில் பழங்கள் மற்றும் மரக்கறிகளை உட்கொள்பவர்கள் இலங்கையில் வெறும் 27.5 சதவீதம் மட்டுமே உள்ளனர்.

நாட்டில் ஒருபுறம் ஊட்டச்சத்துக் குறைபாடு நிலவும் அதேவேளை, மறுபுறம் தவறான உணவு முறையால் உடற்பருமன் மற்றும் தொற்றா நோய்கள் அதிகரித்து வருகின்றன. (நி)

## சிறுவர் தொழிலாளர் முறையை இல்லாதொழிக்க கல்விச்சீர்திருத்தம் அவசியம்

### தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க சுட்டிக்காட்டு



(மொரோக்கோ)

சிறுவர் தொழிலாளர் முறைமையை இல்லாதொழிப்பதற்கு கல்வி சீர்திருத்தம் அவசியமென தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மொரோக்கோவில் நடைபெறும் 6ஆவது சிறுவர் தொழிலாளர் ஒழிப்பு உலகளாவிய மாநாட்டின் போது, பிரதி அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, தற்போதைய அரசாங்கம் புதிய கல்வி சீர்திருத்தங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

இருப்பினும், இலங்கையில் ஆண்டுதோறும் 10 இற்கும் குறைந்த சிறுவர் தொழிலாளர்கள் பதிவாகியுள்ளதாகப் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சிறுவர் தொழிலாளர் முறைமையை இல்லாதொழிப்பதற்காக, வீட்டு வருமானம் மற்றும் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் முதலீடு செய்தல் மற்றும் தரமான கல்விக்கான அணுகலை உறுதி செய்தல் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளதாக தொழில் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## கடவுச்சீட்டு வழங்கும் சேவைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பின

(கொழும்பு)

கணனி அமைப்புகள் மீட்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களில் கடவுச்சீட்டு விநியோகம், ஒருநாள் சேவை மற்றும் விசா நடைமுறைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு சரிசெய்யப்பட்டுள்ளதால், ஒருநாள் சேவை மற்றும் சாதாரண சேவைகள் அனைத்தும் தற்போது இயங்குவதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## முருத்தெட்டுவே ஆனந்த தேரரை சந்தித்தார் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று கொழும்பு நாரஹேன்பிட்டி அபயாராமய விகாரையில் அதன் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரரை சந்தித்தார்.



தற்போதைய அரசாங்கத்தால் மகா சங்கத்தினருக்கும் சம்புத்த சாசனத்திற்கும் செய்து வரும் பழிவாங்கல்கள் தொடர்பிலும், இனவாதத்தை தூண்டும் விவதமாகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் விதம் தொடர்பிலும் இங்கு அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் நிமித்தம் தேரரிடம் ஆசீகளையும் ஆலோசனைகளையும் பெற்றார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத்தில் சாதனை படைத்த யூனியன் கல்லூரி வீராங்கனைகளுக்கு அமோக வரவேற்பு



கடந்த புதன்கிழமை கொழும்பு குதிரைப் பந்தையத் திடல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 14 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதன் முறையாக சம்பியனாகியது.

குறித்த வீராங்கனைகளுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

கே.கே.எஸ் வீதி மருதனார் மடம் சந்தியிலிருந்து தெல்லிப் பழை வரை அமோக வரவேற்பு அளிக்கப்பட்டு கௌரவிக் கப்பட்டனர். பின்னர் பாடசாலை சமூகத்தினராலும் கௌரவிக்க ப்பட்டிருந்தனர்.

கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-105)




## யாழ். மாநகர...

யாழ். மத்திய பேருந்து நிலையச் சூழலில் அமைந்துள்ள பழக்கடைகளை அகற்றுவது தொடர்பாக மாநகர சபை உறுப்பினர் ப. தர்சானந்தினால் நேற்றைய தினம் யாழ். மாநகர சபை அமர்வில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. இது தொடர்பில் பல வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், முறையான மாற்றுத் திட்டம் அல்லது பொறிமுறை இன்றி இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டுவரக் கூடாது என வலியுறுத்தினர்.

பாதிக்கப்பட்ட வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் இப்பிரேரணை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் இந்த விடயத்தில் மாநகர முதல்வர் அலட்சியப் போக்குடன் செயற்பட்டார் என்றும் உரிய தீர்வை வழங்காது நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் சபையை முன்னெடுத்துச் சென்றார் என்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

முதல்வரின் இந்தச் செயலைக் கண்டித்த அவர்கள், குறித்த பிரேரணையைக் கிழித்தெறிந்து தமது எதிர்ப்பைப் பதிவு செய்ததுடன் சபையை விட்டு வெளியேறினர்.

பழக்கடை வியாபாரிகளின் போராட்டம் மற்றும் சபைக்குள் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் வெளிநடப்பு காரணமாக யாழ். மாநகரசபை வளாகத்தில் நேற்று பெரும் பரபரப்பு நிலவியது. (ம-7,33,104)

## சட்ட விரோத...

மீனவர்கள் நேற்று போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் சட்டவிரோத தொழில் அதிகரிப்பு, சிறுதொழில் மீனவர்கள் வாழ்வு பாதிப்பு, சட்டவிரோத தொழிலை தடைசெய், சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்கு எதிராக அநுர அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை பின் வாங்காதே எனப் பல கோசங்களுடன் நடைபவனியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு வருகைதந்து போராட்டக் கோரிக்கைகள் உள்ள டங்கிய மகஜரினை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் அவர்களிடம் கையளித்தனர்.

தொடர்ந்து போராட்டக்காரர்களுக்கும் ஊடகங்களுக்கும் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 20 வீதமானவர்கள் மீன்பிடித்துறையில் ஈடுபட்டுள்ளதாகவும் சுமார் 71 கிலோமீற்றரிற்கும் அதிகமாக கடல் உள்ளதாகவும் மீன் வளம் சட்டவிரோதமுறையில் அழிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.


மேலும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாக இயன்றவரை சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துவதாகும். எமது மாவட்டத்தில் மீன்பிடித்துறை பிரச்சினையிலும் பார்க்க அதிகமாக இருந்த போதைப்பொருள் பிரச்சினை தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் போராட்டகாரர்களின் கோரிக்கையினை தாம் அரசாங்கத்திற்கு அனுப்புவதாகவும் அரசாங்கத்தின் கோரிக்கைகள் மீனவர்களுக்கு சாதகமாக இருக்குமென நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

## சிறீதரன் எம்.பி...

தலைவர் பதவியை சட்டவிரோதமாகப் பறித்தமையைக் கண்டித்து குறித்த அநீதிக்கான ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 01 - 1938



மறைவு 12 - 02 - 2026

## சுப்பிரமணியம் திருப்பரங்கிரிநாதன்
### (ஓய்வுபெற்ற தபாலதிபர்)

சித்திரகூடம், மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் இமையாணன், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருப்பரங்கிரிநாதன் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அவர்கள் கடந்த (12.02.2026) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கமுத்துப்பிள்ளை தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற விநாயகலிங்கம் - சோதி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற ரதி அவர்களின் கணவரும் பொன்மயிலைநாதன், சுசீலாவதி, காலஞ்சென்ற பத்மாவதி, கருணாவதி, அருணகிரிநாதன், சிவலோகநாதன் ஆகியோரின் சகோதரனும் திருத்தணிகைநாதன், செந்தில்நாதன் (அதிபர் - யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்), நரேந்திரநாதன், காலஞ்சென்ற நெல்லைநாதன் ஆகியோரின் தந்தையும் ஜெயமாலா, சுகந்தி, நர்மதா ஆகியோரின் மாமனாரும் சங்கரநாதன், பரணிகா, ஆரதி, தருணிகா, கோசிகா, நதிஷா, நயனி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.02.2026) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இமையாணன், உடுப்பிட்டி. (2048) குடும்பத்தினர்


# பணியாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர்(வெயிற்றர்) உடனடியாகத் தேவை.

உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 649 1027

(2049)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இறக்குமதி வாகனங்களுக்கு ஏப்ரல் முதல் புதிய வரி



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 2.5 சதவீதம் வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அரோஷ ரோட்ரிகோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் தெரிவித்தார்.

இது 2026 வரவுசெலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வரியாகும். இந்த வரி அறவீடானது சுங்கத் திணைக்களத்திலேயே மேற்கொள்ளப்படும்.

தற்போது சுங்கத்தில் விடுவிப்புச் செயற்பாடுகளில் உள்ள வாகனங்களுக்கு இந்த வரி பொருந்தாது.

வாகனங்களின் விலை அதிகமாக இருப்பதால், 2.5 சதவீத வரி என்பது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என அரோஷ ரோட்ரிகோ குறிப்பிட்டார்.

எளிமையாகச் சொன்னால், 100 இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள ஒரு வாகனத்தின் விலை, இந்த வரி காரணமாக சுமார் இரண்டரை இலட்சம் ரூபாயினால் அதிகரிக்கும். எனவே, இந்த வரிச் சுமையால் வாகன விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்.

எவ்வாறாயினும், "டித்வா" புயல் பாதிப்புகளுக்குப் பின்னர், தற்போது மக்கள் மத்தியில் வாகனங்களைக் கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சர்வதேச சந்தையில் தேவை அதிகரித்துள்ளதால், அந்த நாட்டில் ஏல விலைகளும் அதிகரித்துள்ளன.

அதன்படி, அரசாங்கத்தின் புதிய வரி மற்றும் சர்வதேச சந்தை விலை உயர்வு ஆகிய இரண்டின் காரணமாகவும், நாட்டில் வாகன விலைகள் எதிர்காலத்தில் நிச்சயமாக அதிகரிக்கும் என்று அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (நி)

# காதலர் தினத்திற்கான பூ விற்பனையில் வீழ்ச்சி



(கொழும்பு)

காதலர் தின பூ விற்பனை இந்த ஆண்டு பாரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாக கொழும்பிலுள்ள பூ விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிக விலை மற்றும் மக்களின் குறைந்த கொள்வனவு சக்தியே இதற்குக் காரணம் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு சாதாரண நாட்களில் சுற்றப்பட்ட சிவப்பு ரோஜா ரூ.350 இற்கு விற்கப்படும் நிலையில், காதலர் தினத்தை முன்னிட்டு அதன் விலை அதிகரித்துள்ளது.

ஒரு பூச்செண்டு ரூ.2500 முதல் ரூ.3000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

பாரிய இணைய நிறுவனங்கள் உயர் மட்ட வாடிக்கையாளர்களைக் குறிவைத்து ரூ.50,000 முதல் ரூ.75,000 க்கும் அதிகமான விலையுள்ள பாரிய ரோஜா பூச்செண்டுகளை விற்பனை செய்கின்றன.

நுவரெலியா மற்றும் பதுளை பகுதிகளில் அறுவடை குறைவாக உள்ளதால், இந்தியாவிலிருந்து பூக்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அதிக இறக்குமதி வரி மற்றும் போக்குவரத்து செலவுகள் காரணமாக பூக்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் இறக்குமதி வரியைக் குறைக்க வேண்டும் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வழமையாக பெப்ரவரி மாதம் பூ விற்பனைக்குச் சிறந்த மாதமாக இருந்தாலும், இந்த ஆண்டு ஜனவரி மற்றும் டிசம்பர் மாதங்களை விடவும் மோசமான விற்பனையே பதிவாகியுள்ளது.

வர்த்தகத்தை மேம்படுத்த சில கடைக்காரர்கள் தள்ளுபடி சலுகைகளை வழங்கினாலும், ஒட்டுமொத்த கேள்வி மந்தமாகவே உள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# 7 பல்கலைக்கழகங்களில் புதிய விடுதிகள்

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஏழு பல்கலைக்கழகங்களில் புதிய விடுதி வசதிகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்களை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களிடையே நிலவும் தங்குமிட வசதிகளுக்கான கடும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விடுதிகள் மூலம் குறைந்தது 2,400 மாணவர்கள் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.


கல்வி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. மாணவர்களுக்குச் சிறந்த வாழ்க்கைச் சூழலை வழங்குவதன் மூலம், அவர்களின் கல்விசார் அனுபவங்களையும் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான இலக்காகும்.

தற்போது பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இந்த புதிய விடுதி வசதிகள் மாணவர்களின் தங்குமிடப் பிரச்சினைகளுக்குப் பெரும் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# பகுதிநேர வேலைவாய்ப்புக்களை அங்கீகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பகுதிநேர வேலைவாய்ப்புகளை முறையாக அங்கீகரிக்கும் வகையில், தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.



தொழில் அபிவிருத்தி பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பப் பயிற்சிகளில் ஈடுபடும் இளைஞர்கள், தமது வாழ்வாதாரத்திற்காக முழுநேர வேலையில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், அவர்கள் பயிற்சியை இடைநடுவில் கைவிடும் நிலை ஏற்படுகின்றது.

இதனைத் தவிர்க்கவே பகுதிநேர வேலைக்கான சட்டப்பூர்வ அந்தஸ்து அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளின்படி, இலங்கையில் 2024 ஆம் ஆண்டில் கல்வி, வேலைவாய்ப்பு அல்லது எந்தவித பயிற்சியும் இல்லாத இளைஞர்களின் விகிதம் 17.2 சதவீதமாகக் காணப்பட்டுள்ளது.

இதில் பெண்களின் பங்களிப்பு 22.4 சதவீதமாகவும், ஆண்களின் பங்களிப்பு 11.9 சதவீதமாகவும் பதிவாகியுள்ளதாகவும் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)

# விசேட சோதனை 820 பேர் கைது



(கொழும்பு)

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 820 பேர் போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 823 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 4 பேர் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# கையடக்க தொலைபேசி ஊடாக ஓய்வூதியர்களுக்கு சேவைகள்

(கொழும்பு)

ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கென இணையத் தளம் மூலம் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

திணைக்களத்துடன் தொடர்பிலுள்ள 20 ஓய்வூதியதாரர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இது குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கையடக்க தொலைபேசி ஊடாக, ஓய்வூதிய தாரர்கள் அணுகக்கூடிய பல சேவைகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மகா சிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானத்தில் மகாசிவராத்திரியை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு விஷேட பூஜைகள் நடைபெறும் என ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

## புதுக்குடியிருப்பு சந்தை திடீர் பரிசோதனை

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள மீன்சந்தை, இறைச்சிக் கடைகள், பழக் கடைகள் மற்றும் மரக்கறிக் கடைகள் மீது புதுக்குடியிருப்பு சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றையதினம் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சோதனையின் போது அழுகிய நிலையில் விற்பனைக்காக வைத்திருந்த பழங்கள் மற்றும் மரக்கறிகள் சில கடைகளில் கண்டறியப்பட்டன.

இதனையடுத்து உணவுப் பொருட்களை சுகாதாரமான முறையில் விற்பனை செய்ய வேண்டுமென வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (8-299)

# மன்னார்-முள்ளிக்குளம் வரை இந்திய மீனவர்களின் வருகை அதிகரிப்பு

## கடற்றொழில் இணைய செயலாளர்

**(மன்னார்)**

**நாட்டில் ஏற்பட்ட டித்வா புயலுக்கு பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வரும் என எதிர்பார்த்த நிலையில் புயலின் பின்னர் அவர்களின் வருகை அதிகரித்த நிலையில் காணப்படுவதாக வடமாகாண கடற்றொழில் இணையத்தின் செயலாளர் என்.எம் ஆலம் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் தொடக்கம் தெற்கு பகுதியாக இருக்கின்ற சௌத்பார், வங்காலை, சிலாபத்துறை, முள்ளிக்குளம் ஆகிய கடற்பகுதிகளுக்கு தற்போது இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை அதிகரித்துள்ளது.

இந்திய மீனவர்கள் தொடர்பாக நாங்கள் அரசுக்கு பல்வேறு விடயங்களை தெளிவுபடுத்தினாலும், அரசாங்கம் குறித்த விடயத்தை கண்டு கொள்வதாக இல்லை.

வடபகுதியில் தடை செய்யப்பட்ட தொழில் முறைமைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று அண்மையில் தபாலட்டைகள் ஊடாக ஜனாதிபதிக்கும், கடற்றொழில் அமைச்சருக்கும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம்.

எமது மீனவர்கள் தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே குறித்த தொழில்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற காரணத்தை முன்வைத்தோம்.

தடை செய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளினால் சிறு மீனவர்கள் பாதிக்கப்படுவதுடன் கரை வலை தொழிலும் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். (8-285)

## ஜோதிலிங்க தரிசனம்

(யாழ்ப்பாணம்)

பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்க தரிசனம் பெப்ரவரி 14, 15, 16 ஆம் திகதிகளில் கீரிமலை நகுலேஸ்வர ஆலய தெற்கு வீதியில் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் நாளைய தினம் காலை 9 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 5 மணி வரையும் நாளை மறுதினம் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் ஜோதிலிங்க தரிசனம் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## அன்னதான மண்டபம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு ஆழியவளை சக்தி அம்மன் ஆலய அன்னதான மண்டப திறப்பு விழா அண்மையில் ஆலயத் தலைவர் பொன்னுச்சாமி பிரேமதாஸ் தலைமையில் நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட குறித்த அன்னதான மண்டபத்தை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார். (8-60)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்தியசாலை திறந்து வைப்பு

(தருமபுரம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்தியசாலை நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

பளை பிரதேசத்தில் அமைந்துள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வடக்கு மாகாண சபைக்கு வழங்கும் சமூக வலுவூட்டல் நன்கொடை நிதி 17 மில்லியன் ரூபாவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நிதி 12 மில்லியன் ரூபாவுமாக 29 மில்லியன் ரூபா செலவில் குறித்த ஆயுள்வேத வைத்தியசாலை பளை நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சன் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவிஆணையாளர் ப.சத்தியராகவன், பளை புனித அந்திரேயா ஆலய அருட்பணி.கி.வரதராஜன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-316)



# சட்டவிரோத மணல் அகழ்வு கப்ரக வாகனம் மீது துப்பாக்கிச் சூடு



(தரும்புரம்)

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில், நேற்று முன்தினம் இரவு கப்ரக வாகனம் மீது பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக புளியம் பொக்கணை பகுதியில் இருந்து மணல் ஏற்றி சென்ற வாகனம் மீதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

தேராவில் பகுதியில் கப்ரக வாகனத்தை பொலிஸார் நிறுத்திய போது, வாகனம் சமிக்ஞையை மீறி நிறுத்தாது சென்ற நிலையில் பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

குறித்த சம்பவத்தின் போது எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இதன்போது சாரதி வாகனத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் வாகனத்தின் சக்கரத்தில் சிதைவு ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

# பருத்தித்துறை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அபராதங்கள்!

(கரணவாய்)

பருத்தித்துறை நகர்ப்புறத்தில் அமைந்துள்ள பழக்கடைகளில் மருந்து நேரடியாக விசிறப்பட்டு பழுக்க வைக்கப்பட்ட வாழைப் பழங்களினை விற்பனை செய்வதாக பொதுமகனினால் பருத்தித்துறை நகரசபைக்கு பொது முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

குறித்த பொது முறைப்பாடு தொடர்பாக பரிசீலனை மேற்கொண்டு உறுதிப்படுத்தியதுடன் ஒரு பழக்கடையில் மருந்துகளுடன் Sprayer கைப்பற்றிய நிலையில் குறித்த உரிமையாளருக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை கடுமையான எச்சரிக்கையுடன் 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. (8-60)

---

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக் குட்பட்ட லூத்து மாதா கோவில் பெருவிழாவில் உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது இதன்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத ஐஸ்கிறீம் வாகனங்கள், காரம் சுண்டல் வாகனங்கள், பாணிபூரி விற்பனை நிலையங்கள் உட்பட 8 உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஷினால் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் 6 வியாபார நிலைய உரிமையாளர்களிற்கு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் வருகை தராத இருவருக்கு வழக்கானது தவணையிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (8-60)

---

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் திண்மக்கழிவுகள் கொட்டப்படுவதனை தடுக்கும் முகமாக அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுகின்ற பொது இடங்களை அடையாளப்படுத்தி கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அவதானிக்கப்பட்டது.

இதன்போது பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட அம்புலி ஒடை வீதியில் திண்மக் கழிவுகளை வீசிச் சென்றவர் இனங்காணப்பட்டு அவருக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஷினால் நேற்றைய தினம் பருத்தித்துறை நீத வான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது விசாரணையின் பின் கடுமையான எச்சரிக்கையுடன் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளுக்கு இடமளிக்க வேண்டும்

## ரவிகரன் எம்.பி

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட, ஒலுமடு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சைவமக்கள் சுதந்திரமாக சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டுமெனவும், சைவ மக்களின் வழிபாட்டுரிமை பாதுக்கப்படவேண்டுமெனவும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இம்முறை வெடுக்குநாறி மலையில் சைவமக்கள் சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்குரிய வழிவகைகள் ஏற்படுத்தப்படுமென வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் உபாலி சமரசிங்க வால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றைய தினம் இடம்பெற்ற நிலையில், குறித்த கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தருகின்ற அடியவர்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு வவுனியா வடக்கு பிரதேசசபைத் தவிசாளருக்கு இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்கள் உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (8)

# சிவராத்திரியை முன்னிட்டு விசேட கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரியை முன்னிட்டு, திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள, முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழா முன்னெடுக்கப்படவுள்ளது.

சிவராத்திரி தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு ஆலய முன்றலில் ஆலய தலைவர் கோகுலராஜ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், யாழ்.பல்கலைகழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிவராத்திரி விழாவில் விசேட கலை நிகழ்வாக வள்ளி திருமண சிந்துநடை கூத்தும், கோவலன் கண்ணகி சிந்துநடை கூத்தும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)



மகா சிவராத்திரி பெருவிழாவை முன்னிட்டு திருக்கேதீச்சர ஆலயத்தின் பிரதான நுழைவாயிலில் வரவேற்பு அலங்கார வளைவு அமைக்கப்பட்டுள்ளது.

பக்தர்களை வரவேற்கும் வகையில் அழகிய அலங்காரங்களுடன் அமைக்கப்பட்ட இந்த வளைவு, விழா சூழலை மேலும் சிறப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது.

# கெஹலியவுக்கு எதிரான வழக்கு ஏப்ரல் 27இல் மீண்டும் விசாரணைக்கு



(கொழும்பு)

முறையற்ற வகையில் சொத்துக்களை ஈட்டிய குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கினை, எதிர்வரும் ஏப்ரல் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் அதிகாரிகள் மற்றும் பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி காஞ்சன ரத்வத்த ஆகியோர் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதிபதி, வழக்கினை ஏப்ரல் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கத் தீர்மானித்தார்.

அன்றைய தினம் சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்து அவர்களுக்கு அழைப்பாணை விடுக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதிவரையான காலப்பகுதியில், கெஹலிய ரம்புக்வெல்ல ஊடக, சுகாதார மற்றும் சுற்றாடல் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் முறையற்ற வகையில் சொத்துக்களை ஈட்டியதாக நிதி தூய்தாக்கல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் பிரதிவாதிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீண்டும் விளக்கமறியலில்




(கொழும்பு)

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட 5 சந்தேக நபர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)

# சிஐடியில் முன்னிலையாகாத கோட்டாபய ராஜபக்ச



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட நிலையில் அவர் அங்கு வரவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு நடைபெறும் விசாரணை ஒன்றுக்காக வருமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னர் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகவில்லை.

கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர் இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பாக கோட்டாபய ராஜபக்சவிற்கு கடந்த வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வ அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தது.

கொழும்புக்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டுத் தொகுதிக்குச் சொந்தமான பல வீடுகளை பலருக்கு சட்டவிரோதமாக ஒதுக்கியதை அங்கீகரிக்கும் கடிதங்கள் வெளியிடப்பட்டமை தொடர்பில் இவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதேவேளை கோட்டாபய ராஜபக்ச அங்கு முன்னிலையாகாமைக்கான சரியான காரணங்கள் இது வரை வெளியாகாத நிலையில் இது தொடர்பான விசாரணைகள் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் - 21 - 04 - 1965

மறைவு - 15 - 01 - 2026

கடந்த 15.01.2026 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்.

## தம்பிராசா ஜெயசந்திரன்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த 12.02.2026 வியாழக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 14.02.2026 இன்று சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துக்கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிராமணோடை வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்:-குடும்பத்தினர்.
(6833) 077 086 5444, 074 050 9127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## எகிப்து பிரமிட்களில் தமிழ் எழுத்துக்கள்



(கெய்ரோ)

எகிப்து பிரமிட் கல்லறைகளில் தமிழ் - பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட 2000 ஆண்டுகள் பழமையான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எகிப்தில் உள்ள புகழ்பெற்ற யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமான கிங்ஸ் பள்ளத்தாக்கில் உள்ள பாறையில் செதுக்கப்பட்ட கல்லறைகளில் இருந்து தமிழ்-பிராமி, பிராகிருதத்தில் பொறிக்கப்பட்ட 30 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆய்வாளர்கள் நடத்திய இந்த ஆய்வில், இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கும் மத்திய கிழக்கு நாடான எகிப்துக்கும் இடையிலான பண்டைய வர்த்தகத் தொடர்புகளுக்கு மற்றொரு சான்றாக அமைந்துள்ளது.

6 கல்லறைகளில் காணப்படும் கல்வெட்டுகளில், 20 தமிழ் மொழியிலும், மீதமுள்ள 10 சமஸ்கிருதம் மற்றும் பிராகிருத மொழியிலும் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறை ஏற்பாடு செய்த தமிழ் கல்வெட்டு குறித்த சர்வதேச மாநாட்டில், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் இங்கோ ஸ்ட்ராச் மற்றும் பிரான்சின் பரிஸில் உள்ள பேராசிரியர் சார்லோட் ஷ்மிட் ஆகியோர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

“சிகை கொற்றன்” என்ற தமிழ் வணிகரின் பெயர், 5 வெவ்வேறு பிரமிட்களில் 8 முறை கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு கல்வெட்டில் “சிகை கொற்றன் - வர கண்ட” (சிகை கொற்றன் இங்கே வந்து பார்த்தான்) என பொறிக்கப்பட்டுள்ளது.

ரோமானிய காலத்தில் தமிழ் வணிகர்கள் கடல் கடந்து எகிப்து சென்று, அங்கிருந்து உள்நாட்டுப் பகுதிகளுக்கும் பயணம் செய்துள்ளனர் என்பதற்கு இதுவே முதல் நேரடி ஆதாரமாகவும் அமைந்திருக்கிறது. (3)

## அகமதாபாத் விமா... விமானியின் திட்ட...

### வெளியான அறிக்கை...



(டில்லி)..........

**அகமதாபாத் விப... துக்கான காரணம் தொ... பக் கோளாறு அல்ல... விமானியின் திட்டமி... என்று வெளிநாட்டு ஊட... அறிக்கை வெளியிட்டுள்...**

குறித்த அறிக்கையில், விமானம் புறப்பட்ட 32 விநாடிகளிலேயே அதன் எரிபொருள் சுவிட்சுகள் கையால் அணைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் என்ஜின்கள் இயங்காமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு நடந்துள்ளது என்றால் இதுவொரு தற்செயலான தவறு அல்ல, திட்டமிட்டு செய்யப்பட்ட செயல் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில், அமெரிக்காவின் வோஷிங்டனில் ஆய்வு செய்யப்பட்டது.

இதன்போது, விமானத்தின் காக்பிட் குரல் பதிவு தரவுகள் மூலம், விமானத்தின் தலைமை விமானி கப்டன் சுமித் சபர்வாலே என்ஜின்களை அணைத்ததாக தெரிய வருவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த விமானி, மன அழுத்தத்தில் இருந்தது விபத்து நடந்து ஒரு மாதத்தின் பின் தெரிய வந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், போயிங் 787 ட்ரீம்லைனர் ரக விமானத்தின் இரண்டு என்ஜின்களும் ஒரே நேரத்தில் இயந்தி... லிழக்க... ரிக்க ... னர்.

இத... கப்டன்... விமான... வித்து... வனத்... விமான... அவர்க...

கடந்... தாபாத்...

## வடகொரியாவின் அடுத்த வாரிசை அறிவித்தார் கிம் ஜாங் உன்



(பியாங்யாங்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், தனது 13 வயது மகள் கிம் ஜு ஏ-வை தனது அரசியல் வாரிசாக அதிகாரப்பூர்வமாகத் தேர்ந்தெடுத்துள்ளதாகத் தென் கொரிய உளவு அமைப்பு தெரிவித்துள்ளது.

சமீபகாலமாக அரச விழாக்களில் ஜு ஏ-வின் பங்களிப்பு அதிகரித்துள்ளதையும், அவர் முக்கியக் கொள்கை முடிவுகளில் தனது கருத்துகளைத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளதையும் சுட்டிக்காட்டி, அவர் இப்போது “வாரிசு நியமனம்” எனும் நிலையை எட்டியுள்ளதாக அந்நாட்டு பாராளுமன்றத்தில் விளக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் சீனாவுக்குத் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட ஜு ஏ, அங்கு நடைபெற்ற பிரம்மாண்ட இராணுவ அணிவகுப்பிலும் கலந்து கொண்டார்.

வடகொரிய அரச ஊடகங்களில் வெளியாகும் புகைப்படங்களில் அவர் தனது தந்தைக்கு நிகரான முக்கியத்துவத்துடன் காட்டப்படுவது, அவர் நாட்டின் இரண்டாவது சக்திவாய்ந்த தலைவராக உருவெடுத்துள்ளதைக் குறிக்கிறது.

ஆணாதிக்கம் நிறைந்த வடகொரியச் சமூகத்தில் ஒரு பெண் வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்படுவது ஆச்சரியத்தை ஏற்படுத்தினாலும், கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜோங்கின் செல்வாக்கு இதற்கு ஒரு முன்னுதாரணமாகப் பார்க்கப்படுகிறது.

இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள வடகொரிய ஆளும் கட்சி மாநாட்டில், ஜு ஏவின் எதிர்காலப் பொறுப்புக்கள் குறித்த கூடுதல் தகவல்கள் வெளியாகக் [illegible] (3)

## பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றியது தேசியவாதக்கட்சி!

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தெற்காசிய நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மையை மீட்டெடுக்கும் முக்கியமான தேர்தலாகக் கருதப்பட்ட இ... வாக்கெடுப்பில், அந்தக் கட்சி பெ... ஆதரவைப் பெற்றுள்ளதாக தெரிவி... படுகிறது.

2024ஆம் ஆண்டு வெடித்த மக்... போராட்டங்களின் பின்னர், நீ... காலமாக பிரதமராக பதவி வகி... வந்த ஷேக் ஹசீனாவின் அரசு கவி... கப்பட்டதைத் தொடர்ந்து பங்க... தேஷில் நடைபெற்ற முதல் தேசி...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

## ான விபத்து

## மிட்ட செயல்!

### கையில் பரபரப்பு

மான விபத்
தொழில்நுட்
, மாறாக
ிட்ட செயல்
டகம் ஒன்று
ளது.



திரக் கோளாறு காரணமாகச் செய
க்க வாய்ப்பில்லை என்று அமெ
நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ள


தற்கிடையில், இந்தக் குற்றச்சாட்டை
ன் சபர்வாலின் குடும்பத்தினரும்
ணிகள் சங்கங்களும் மறுப்பு தெரி
துள்ளது. விமானத் தயாரிப்பு நிறு
த்தை காப்பாற்றவே இறந்த
ணிகள் மீது பழி சுமத்தப்படுவதாக
கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ந்த ஆண்டு ஜூன் 12 அன்று அகம
த்தில் இருந்து லண்டன் நோக்கிச் சென்ற ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சில விநாடிகளில் கட்டுப்பாட்டை இழந்து, மருத்துவக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேர் மற்றும் தரையில் இருந்த 19 பேர் என மொத்தம் 260 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (3)

இந்த
பரும்
விக்கப்

க்கள்
ண்ட
கித்து
ளைக்
களா
சியத்



தேர்தல் இதுவாகும்.

சுமார் 175 மில்லியன் மக்கள்தொகையைக்கொண்ட, முஸ்லிம் பெரும்பான்மை நாடான பங்களாதேஷில், பல மாதங்களாக ஹசீனா ஆட்சிக்கு எதிரான கடும் அமைதியின்மை நிலவி வந்தது.

இதனால் அன்றாட வாழ்க்கை மட்டுமன்றி, உலகின் இரண்டாவது பெரிய ஆடை ஏற்றுமதியாளரான ஆடைத் துறை உள்ளிட்ட முக்கிய தொழில்களும் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. இந்தச் சூழலில், அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கும் தீர்மானம் மிகவும் அவசியமானதாகக் கருதப்பட்டது.

மேலும், 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் தலைமையிலான அண்மைய போராட்டங்களுக்கு பின்னர் நடைபெற்ற முதல் தேசியத் தேர்தலும் இதுவாகும்.

தேர்தலுக்கு முன் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் பங்களாதேஷ் தேசியக் கட்சி முன்னிலையில் இருந்த நிலையில், தற்போது அந்தக் கணிப்புகளை நனவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊடகத் தகவல்களின் படி, அந்தக் கூட்டணி 300 உறுப்பினர்களைக் கொண்ட ஜாதியா சங்சத் (தேசியசபை) யில் 209 இடங்களை வென்று, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.


வாக்கு எண்ணிக்கையில் பெரும்பான்மை உறுதியாகியதும், கட்சி தலைமையகம் மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன், நாட்டின் நலன் மற்றும் அமைதிக்காக வெள்ளிக்கிழமை சிறப்பு பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளது. (3)

## உரிமையாளருக்காக 10 வருடங்கள் கல்லறையில் காத்திருந்த நாய்

### நாயின் அன்பு உருவாக்கிய புதிய சட்டம்

(பிரேசிலியா)

பிரேசிலில் தனது உரிமையாளரின் கல்லறையிலேயே 10 வருடங்களாக வாழ்ந்து வந்த "பொப்" என்ற நாயின் விசுவாசத்தால் கவரப்பட்ட அந்நாட்டு அரசாங்கம், செல்லப்பிராணிகளை உரிமையாளர்களின் குடும்பக் கல்லறைகளிலேயே அடக்கம் செய்ய அனுமதிக்கும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.



பிரேசிலின் சாவ் பாலோ மாகாணத்தில் தனது உரிமையாளர் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையிலேயே 10 வருடங்களாக வாழ்ந்து வந்த "பொப்" என்ற நாயின் நினைவாகப் பெயரிடப்பட்ட புதிய சட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது.

உரிமையாளரின் இறுதிச் சடங்கின் போது கல்லறைக்கு வந்த "பொப்", அங்கிருந்து செல்ல மறுத்து விட்டது. உறவினர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்ற போதிலும், அது மீண்டும் கல்லறைக்கே திரும்பி வந்தது.

போர்த்துகேய மொழியில் "பொப் கொவெய்ரோ" (கல்லறை தோண்டுபவர்) என்று அழைக்கப்பட்ட இந்த நாய், அங்கு வரும் துக்கத்தில் இருக்கும் மக்களுக்கு ஆறுதலாகவும் விளையாட்டு நண்பராகவும் மாறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2021 ஆம் ஆண்டு வாகனம் ஒன்றில் மோதி உயிரிழந்த இந்த நாய், அது வாழ்ந்த அந்த இடத்திலேயே தனது உரிமையாளருக்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய சட்டத்தின் மூலம் பிரேசிலின் மக்கள் தொகை கூடிய மாநிலமான சாவ் பாலோவில் உள்ள மக்கள், சுகாதார விதி முறைகளைப் பின்பற்றித் தமது செல்லப்பிராணிகளான நாய் மற்றும் பூனைகளைத் தங்களது குடும்பக் கல்லறைகளிலேயே அடக்கம் செய்ய முடியும்.

உலகில் செல்லப்பிராணிகளை அதிகம் வளர்க்கும் நாடுகளில் மூன்றாவது இடத்தில் உள்ள பிரேசிலில், இந்தச் சட்டம் விலங்கு ஆர்வலர்கள் மற்றும் உரிமையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (3)

## பீஜிங்குடனான பதற்றங்களுக்கு மத்தியில் சீனக் கப்பலைக் கைப்பற்றிய ஜப்பான்

(டோக்கியோ)


சோதனைக்காக நிறுத்த உத்தரவிடப்பட்டபோது தப்பிச் செல்ல முயன்ற சீன மீன்பிடிக் கப்பலை கைப்பற்றியதாக ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை பீஜிங்குடனான டோக்கியோவின் பதற்றங்களை மேலும் உயர்த்தியுள்ளது.

ஜப்பானின் தென்மேற்கில் உள்ள நாகசாகி மாகாணத்திற்கு அப்பால் உள்ள பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் படகு தடுத்து நிறுத்தப்பட்டு, அதன் கப்டன் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டதாக ஜப்பானின் மீன்வள நிறுவனம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக் குப் பின்னர் சீன மீன்பிடிப் படகை அந்த நிறுவனம் கைப்பற்றுவது இதுவே முதல் முறை.

ஜப்பானின் அறிக்கைக்கு சீனா இன்னும் பதிலளிக்கவில்லை.



கைப்பற்றலின்போது, 47 வயதான சீன நாட்டவரான கப்டன் உட்பட கப்பலில் 11 பேர் அதில் இருந்ததாகவும் மீன்வளத் துறை நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி நவம்பர் மாதம் சீனாவை கோபப்படுத்திய தைத் தொடர்ந்து, பீஜிங் தாய்வானை வலுக்கட்டாயமாக கைப்பற்ற முயன்றால் டோக்கியோ இராணுவ ரீதியாக தலையிடும் என்று கூறியதைத் தொடர்ந்து வியாழக்கிழமை நடந்த சம்பவம் சீனாவுடனான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

1945 வரை ஜப்பானால் பல தசாப்தங்களாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தாய்வான் அதன் பிரதேசம் என்று சீனா நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை மிளகாய் அறுவடை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம் முன்னெடுத்து வரும் நவீன விவசாய முயற்சியின் பகுதியாக பயிரிடப்பட்ட பச்சை மிளகாய் செடிகளின் விளைச்சலின் மற்றுமோர் அறுவடை அலுவலர்களின் பங்களிப்புடன் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலக நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த அறுவடை நிகழ்வில் பங்கேற்றனர்.

ஆரம்பகட்ட முயற்சியின் வெற்றியைத் தொடர்ந்து, இரண்டாவது கட்டமாக நவீன முறையில் பச்சை மிளகாய் பயிரிடப்பட்டு, திட்டமிட்ட பராமரிப்பு மற்றும் கண்காணிப்புடன் வளர்க்கப்பட்டது.

இந்த முயற்சி, நவீன விவசாய முறைகளை அறிந்துகொள்ள விரும்பும் விவசாயிகள், சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர், மேலும் இளைஞர் விவசாய ஆர்வலர்கள் ஆகியோருக்கு சிறந்த கற்றல் வாய்ப்பாக அமைகிறது.

ஆர்வமுள்ளவர்கள் பயிரிடல் முறைகள், தொழில்நுட்பப் பயன்பாடு, பராமரிப்பு நடைமுறைகள், செலவீன - வருமான மதிப்பீடு உள்ளிட்ட விடயங்களை வார நாட்களில் - காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கிளிநொச்சி மாவட்டச் செயலக அலுவலக தோட்டத்தில் அறிந்து கொள்ளலாம். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>2 இல் செவ்<br>கி-பா-33<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc, MSc, Engineer<br>எதிர்பார்ப்பு: ONLY UK<br>தொ.இ: B/16516 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>1 இல் செவ்<br>கி-பா-13<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc, Nurse<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில்<br>தொ.இ: G/16531 |
| பிறப்பு:1995-RC<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-A/L, pvt Work<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16517 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>8 இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Management, Accountant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தொழில்<br>தொ.இ: G/16532 |
| பிறப்பு:1986-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி-பா-31 3/4<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BSc, Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16519 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>8 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/16536 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-A/L, Security Guard<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16520 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>8 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/16537 |
| பிறப்பு: 1990- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>12 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: BSc, MEd, Teacher<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: B/16523 | பிறப்பு-1996 - இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>12 இல் செவ்<br>கிபா-22 1/2<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்: BSc, IT Analyst<br>எதிர்பார்ப்பு - Engineer, Accountant<br>தொ.இ: G/16538 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 539



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வாழ்க்கைப் பயணம்

மாமனாரிடம் இருந்து லெட்டர் வந்திருந்தது.

ஊரிலே விசேஷம். குடும்பத்தோடு வந்துவிட்டுப் போங்கள் என்று! கணவன் - மனைவி, மூன்று வயதிலே ஒரு குழந்தை. இதுதான் அந்தக் குடும்பம். ரொம்ப வேண்டப்பட்ட ஒரு நண்பனிடம் ஒரு கார் இருந்தது. அதை இரவல் வாங்கிக்கொண்டு மூன்று பேரும் புறப்பட்டார்கள்.

புறப்படுவதற்கு ரொம்ப "லேட்" ஆகிவிட்டது!

ஒரு காட்டு வழியாக போய் ஆக வேண்டும்.

கணவன் கார் ஓட்டுகிறான். மனைவி சுவாரஸ்யமாக பேசிக்கொண்டே வந்ததில் வழியைத் தவற விட்டுவிட்டான். அந்த வழியாகப் போகின்றவர்கள் வருபவர்களிடம் வழியை விசாரிக்கிறான். ஆளாளுக்கு ஒருவிதமாக வழி சொல்கிறார்கள். இவன் குழம்பிப் போய் விட்டான். மெதுவாக பக்கத்திலே உள்ள ஒரு பொலிஸ் ஸ்டேஷனைக் கண்டுபிடித்து அங்கே போய் விபரம் கேட்டான். அங்கே சரியான விபரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு மறுபடியும் புறப்பட்டான்.

இப்படி வழி கேட்டுக்கொண்டு இருந்ததிலேயே ஒரு மணி நேரத்துக்கு மேலே தாமதமாகி விட்டது.

இருட்ட ஆரம்பித்து விட்டது. காட்டுக்குள்ளே கார் வேகமாகப் போய்க்கொண்டிருக்கு! நடுக் காட்டிலே கார் ஸ்டார்ட் ஆகாமல் நின்று போனது. இவன் இறங்கிப் போய் முன்னாடி திறந்து எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கிறான்.

எல்லாம் சரியாக இருக்கிறது! ஒன்றும் குறை தெரியவில்லை!

"சீக்கிரமாக என்ன என்று கவனித்துப் பாருங்கள். இந்த நடுக்காட்டிலே யாராவது நம்மை அடித்துப் போட்டுவிட்டுப் போனால்கூட, ஏன் என்று கேட்பதற்கு நாதியில்லை!" அப்படி என்று அந்த அம்மா அவசரப் படுத்தினார். ஆமாம். இப்போது அவசரப்படுவதை புறப்படும் நேரத்திலேயே கிளம்பியிருந்தால் இப்படி ஆகிருக்குமா?

அலங்காரம் செய்து முடிக்கவே அரை நாள் ஆகிவிட்டது. இப்போது அவஸ்தைப்படுகிறோம். எல்லாம் உன்னாலேதான்!" என்று கத்தினான் அவன். "என்னாலே ஒன்றும் தாமதம் இல்லை. அதுதான் சாப்பிட்டு முடித்து மூன்று மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டோமே!

நீங்கள்தான் வழியை தவறவிட்டுட்டு எங்கெங்கேயோ சுத்தி யார் யாரிடமோ எல்லாம் வழி கேட்டு "லேட்" ஆக்கி விட்டீர்கள்! இல்லை என்றால் எங்கள் அப்பா வீட்டுக்கு இந்நேரம் போய்ச் சேர்ந்திருக்கலாம்!" என்றார் அந்த அம்மா. "உன்னாலேதான் தாமதம்" என்றான் அவன்.

"இல்லை உங்களாலேதான் தாமதம்!" என்றார் அந்த அம்மா.

இரண்டுபேரும் சண்டை போடுவதை காருக்குள்ளே இருந்த குழந்தை பார்த்தது. "ஸ்டாப்! ஸ்டாப்!" என்று கத்தியது!

குழந்தை இப்படிச் சொன்னதைக் கேட்டதும் அவர்களுக்கு சிரிப்பு வந்துவிட்டது? கோபம் மறைந்துவிட்டது!

"கார் நின்று போனால் தள்ள வேண்டியதுதானே. அதற்கு ஏன் இப்படி நீங்கள் இரண்டு பேரும் சண்டை போடுகிறீர்கள்?" என்றது குழந்தை.

"சரி. குழந்தை சொல்கிறபடியே செய்து பார்ப்போம்!" என்றான் கணவன். மனைவியை காருக்கு பின்புறம் நின்று தள்ளச் சொல்லிவிட்டு சுணவன் ஸ்டியரிங் பக்கத்திலே நின்றுகொண்டு முன்பக்கம் தள்ளினான்.

குழந்தை காரின் முன்பக்கக் கண்ணாடியிலே கையை வைத்து தள்ளியது! காருக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டு ரொம்ப சிரமப்பட்டு தள்ளியது. அதுக்கு என்னவோ தானும் காரைத் தள்ளுவதாக நினைப்பு!

கொஞ்சம் தள்ளிவிட்டு "ஸ்டார்ட்" செய்தான். கார் கிளம்பிவிட்டது! மனைவிக்கு ரொம்ப மகிழ்ச்சி. நான் சொன்னது சரியாப் போனது என்று சொல்லி குழந்தை கைதட்டிச் சிரித்தது!

ஒரு வழியாக ஊருக்குப் போய் சேர்ந்தார்கள். "ஏன் இவ்வளவு லேட்?" என்று கேட்டார் மாமனார். கணவனும் மனைவியும் மாறிமாறி காரணத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முடித்த பிறகு குழந்தை பேச ஆரம்பித்தது.

"தாத்தா! அவர்கள் சரியாக சொல்லவில்லை. நான் சொல்கிறேன் கேள்" கார் கிளம்பவில்லை. எல்லோரும் தள்ளினார்கள். அப்போதும் கிளம்பவில்லை. நான் காருக்குள்ளே இருந்தே வேகமாக தள்ளினேன். அப்போதுதான் "ஸ்டார்ட்" ஆனது!" என்று ரொம்பப் பெருமையாக சொல்லியது அந்தக் குழந்தை! அதைக் கேட்டு மூன்று பேரும் சிரித்தார்களாம். இதைக் கேட்கும்போதே நாமும் தான் சிரிக்கிறோம்.

ஒரு கணம் நல்லா யோசித்துப் பாருங்கள். இறைவனின் குழந்தைகளாகிய நாம் வாழ்க்கையிலே ஒவ்வொரு கணமும் இதே மாதிரிதானே பெருமை அடித்துக் கொள்கிறோம்? இந்தக் கதையைச் சொல்லி, இப்படி நம்மைப் பார்த்துக் கேட்கின்றவர் சுவாமி சின்மயா னந்தர்.

நாமெல்லாம் காருக்குள்ளே உட்கார்ந்து கொண்டுதான் சார் கண்ணாடியை தள்ளிக்கொண்டிருக்கிறோம். அதனாலே கார் போகின்றதாகச் சொல்லிக்கொண்டுத்தான் காலம் தள்ளிக்கொண்டிருக்கிறோம்!

நம் ஆள் ஒருவன் ஒரு காரைத் திருடிக்கொண்டு வந்துவிட்டான். பாதி வழியிலே நின்று போனது. என்ன செய்வது?

அந்த வழியாக வந்த ஒருவரைக் கூப்பிட்டு "சார் இந்தக் காரைக் கொஞ்சம் தள்ளி விடுங்களேன். ப்ளீஸ்" என்றான்.

அவர் வந்தார். "நான் இந்தக் காரை தள்ளிவிட்டு உங்களுக்கு உதவ முடியாத நிலையிலே இருக்கிறேன்!

அதற்கு இரண்டு காரணம் உண்டு.

முதல் காரணம்: தான் ஒரு பெரிய மனிதன். இது மாதிரி வேலையெல்லாம். செய்தால் எனக்கு கௌரவக் குறைச்சல்! இரண்டாவது காரணம்: இந்தக் கார் என்னுடையது! அதைத்தான் நீ தள்ளிக்கொண்டு வந்திருக்கிறாய்! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வழங்கல் அமைச்சர் சுசில் இரணைமடு குளத்திற்கு விஜயம்



(தருமபுரம்)

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் வைத்தியர் சுசில் ரணசிங்ஹ அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குளத்தைப் பார்வையிட்டார். தொடர்ந்து காக்கா கடைச் சந்தியிலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நவீன நீர் சுத்திகரிப்பு நிலை யத்தை பார்வையிட்ட அமைச்சர் தொடர்ந்து குறித்த அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட பதினைந்து இலட்சம் ரூபா வீடமைப்பு செயற்பாடுகளையும் விவேகானந்த நகர் பகுதியில் பார்வையிட்டார். (8-316)

# பொருளாதார உத்தியோகத்தர்கள் 34 பேருக்கு புதிய நியமனம்



உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றி வந்த 34 பேர், கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு மாற்றப்பட்டு சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய 34 பேருக்கு கடந்த 11 ஆம் திகதி புதன் கிழமை சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் நியம னம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நியமனக்கடிதங்களை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ் வரன் மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார். (8-285)

# புதிய நிர்வாகத் தெரிவு

(பூநகரி)

பூநகரி பிரதேச அரச சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதிய புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வின் தலைவராக த.ரவீந்திரன், உப தலைவராக பொன்.தில்லைநாதன், செயலாளராக மு. எமிலியாம்பிள்ளை, பொருளாளராக சு. இந்திராதேவி, கணக்காய்வாளராக முருகமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8-84)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 160 | 370 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 300 | 300 | 400 |
| தக்காளி | 150 | 180 | 200 | 200 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 160 | 100 |
| கோவா | 250 | 220 | 200 | 250 | 220 |
| கரட் | 300 | 400 | 400 | 350 | 330 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 | 70 |
| புடோல் | 150 | 150 | 150 | 250 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 240 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 160 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 600 | 650 |
| வெண்டக்காய் | 350 | 350 | 200 | 400 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 200 | 400 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 400 | 400 | 330 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 250 | 230 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 | 700 |
| முருங்கைக்காய் | -- | 3500 | 4000 | -- | -- |
| போஞ்சி | 300 | 300 | 300 | 400 | 350 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 300 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80-160 | 150 | 200 | 110 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 180 | 150 | 120-180 | 110 |
| இராசவள்ளி | 450 | 450 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 160 | 100 | 200 | 200 | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 200 | -- |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 150 | 100 |

# இராசிபலன்

14.02.2026
மாசி 02, சனிக்கிழமை
துவாதசி பிற்பகல் 4.31 மணிவரை
பூராடம் முன்னிரவு 6.49 மணிவரை

சுப நேரம் 3.31-5.03 மணிவரை
இராகு காலம் 09.33-11.03 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
ரோகினி, மிருகசீரிடம்

வளவன்




தொழில்ரீதியாக ஏற்பட்ட மறைமுக எதிர்ப்புகள் மாறும், இழுபறியாக இருந்த காரியங்கள் கை கூடும், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.




உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்ற உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.




பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், அலைச்சல்கள் சற்று கூடும், வைராக்கியத்துடன் செயற்பட்டு காரியம் நிறைவேற்றுவீர்கள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பிறருக்காக பொறுப்பு நிற்பதைத் தவிர்ப்பது நல்லது, வெளிப் பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.




நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




உற்றார் உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் கைகூடும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, இரவு, பகல் பாராது பாடுபடுவீர்கள், காரிய வெற்றிக்கு வழிபாடு அவசியம், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

சுறுசுறுப்பான தேனீக்கு துக்கப்பட நேரமிருக்காது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 978





"ஒரு நிபந்தனையின் பேரில் இருக்கிறோம் உங்களுடைய காயத்துக்கு அஞ்சனம் தடவியிருக்கிறாள் மணிமேகலை. நெஞ்சத்தின் காயத்துக்கும் ஏதோ அஞ்சனம் இருக்கிறது என்று சொன்னாள்அல்லவா? அது என்ன அஞ்சனம் என்பதைத் தெரிவித்தால் இருக்கிறோம்" என்றார் கரிகாலர்.

"அவளைக் கேட்காமல் நாமே அதை ஊகித்துச் சொல்லப் பார்க்கலாமே?" என்றாள் நந்தினி.

"ஒருவேளை காலப் போக்கினால் ஏற்படும் மறதியைச் சொல்லியிருக்கலாம்" என்றார் கரிகாலர்.

"அதுவாக இருக்க முடியாது. காலப்போக்கினால் மாறாத நெஞ்சுப் புண்ணும் உண்டு அல்லவா?" என்றாள் நந்தினி.

"பெண்களின் விடயத்தில் நெஞ்சுப் புண்ணுக்கு ஒரு நல்ல அஞ்சனம் இருக்கிறது! அதுதான் கண்ணீர்!" என்றான் வந்தியத்தேவன்.

"பெண்களைக் கேவலப் படுத்தச் சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்று வல்லத்து இளவரசர் காத்திருந்தார் ஆனால் அவர் சொல்வது சரியல்ல. சில விதமான நெஞ்சுக் காயங்கள் ஏற்பட்டுவிட்டால் கண்ணீர் விடும் சக்தியே போய்விடுகிறது. பிறகு அது அஞ்சனமாக எவ்விதம் பயன்படக்கூடும்?" என்றாள் நந்தினி.

"நாங்கள் இருவரும் சொன்னது சரியில்லையென்றால், நீங்கள் உங்கள் ஊகத்தைச் சொல்லுங்கள்?" என்றான் வந்தியத்தேவன்.

"அதற்கென்ன, சொல்கிறேன். தங்காய்! நீ குறிப்பிடும் அஞ்சனம் செவியின் மூலமாக நெஞ்சுக்குப் போவதல்லவா? யாழிலும், குழலிலும், இனிய குரலிலும் எழும் இன்னிசையைத் தானே நெஞ்சின் காயத்துக்கு அஞ்சனம் என்று சொல்கிறாய்?" என்றாள் நந்தினி.

"ஆம், அக்கா! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று மணிமேகலை கேட்டாள்.

"நான்தான் மந்திரக்காரி என்று சொல்லியிருக்கிறேனே? பிறர் மனத்தில் உள்ளதை அறியும் சக்தி எனக்கு உண்டு. ஐயா! நீங்கள் இருவரும் இன்னிசையின் அந்த அபூர்வ சக்தியை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று நந்தினி கேட்டாள்.

"ஆம், ஆம்! அதை ஊகிக்க முடியாமற் போனது எங்கள் தவறு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். மணிமேகலை இசைக் கலையில் தேர்ந்தவள் என்றும் நன்றாக யாழ் வாசிப்பாள் என்றும் கந்தமாறன் கூறியதும் நினைவு வருகிறது" என்றார் கரிகாலர்.

"தமையன் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? தங்கையின் புகழை யாரிடமாவது சொல்லாத நாளெல்லாம் கடம்பூர் இளவரசருக்குப் பிறவாத நாள் போலிருக்கிறது. மணிமேகலையின் இசைத்திறனைப் பற்றி அவர் கூறியது உண்மைதான். மணிமேகலை யாழ் கூட எடுத்து வந்திருக்கிறாள்.


கானவித்தையின் மகிமை அறியாத என்னை மட்டும் வைத்துக் கொண்டு பாட வேண்டிய நிர்ப்பந்தம் நல்ல வேளையாக அவளுக்கு இன்று இல்லை. ஐயா! பேதைப் பெண்களாகிய எங்களை இன்று புலிக்கு உணவாகாமல் காப்பாற்றினீர்கள். அதற்கு நன்றி நாங்கள் செலுத்த வேண்டாமா? எங்களுடன் உணவருந்தி விட்டு, மணிமேகலையின் இசை அமுதையும் அருந்தி விட்டுத்தான் போக வேண்டும்" என்று வற்புறுத்தினாள் நந்தினி.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மரியாதை மறந்த மாணவன்



ஓர் ஊரில் ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவரிடம் எண்ணற்ற மாணவர்கள் படித்து வந்தனர்.

ஆனால் அவரோ ஒரே ஒரு மாணவனை மிகச் சிறந்த மாணவன் என்று கருதினார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மற்ற மாணவர்களிடம் அவனைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பார். ஒரு சமயம், "நீங்களும் இவனைப்போல் பணிவாக நடந்து கொள்ளவேண்டும்" என்பார்.

இன்னொரு சமயம், "இவன் என்ன பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்கிறான் பார்த்தீர்களா?" என்பார்.

இதனால் மற்ற மாணவர்கள் அவன் மீது வெறுப்புக் கொண்டனர். எப்படியேனும் அவனிடம் குறைகண்டுபிடித்து அதை நம் ஆசிரியரைக் கொண்டே சொல்ல வைக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

ஆகவே அவன் செயல் ஒவ்வொன்றையும் கவனித்து வந்தனர். நாள்தோறும் ஆசிரியர் படுத்து உறங்க வேண்டிய மெத்தையில் அவன் படுத்துப் புரண்ட பின்னர் தான் ஆசிரியரை உறங்க அழைக்கின்றான் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்தது.

நேராக ஆசிரியரிடம் சென்ற அவர்கள், "உங்கள் அன்பு மாணவனின் செயலைப் பார்த்தீர்களா? நாள்தோறும் நீங்கள் உறங்குகின்ற மெத்தையில் முதலில் அவன் படுத்துப் புரண்ட பின்னர் தான் உங்களை அழைக்கிறான்.

இவனைப் போய் நீங்கள் சிறந்த மாணவன் என்று புகழ்கிறீர்கள். உங்களுக்கு ஐயமிருந்தால் அவனையே அழைத்துக் கேளுங்கள்" என்றார்கள்.

அந்த மாணவனை அழைத்த ஆசிரியர் "இவர்கள் சொல்வது உண்மையா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றான் அந்த மாணவன்" எதற்காக அப்படிச் செய்கிறாய்?" என்றார் ஆசிரியர்.

அதற்கு அந்த மாணவன், "ஐயா! தாங்கள் படுக்கும் மெத்தையை நான் நாள்தோறும் நன்றாகத் தட்டி விட்டுத்தான் போடுகிறேன்.

இருந்தாலும் எனக்குத் தெரியாமல் சிறு மணல் அதில் இருந்தாலும் அது தங்கள் திருமேனியை உறுத்துமே.

அப்படி ஏதேனும் இருந்தால் அதையும் தட்டி விடலாமே என்பதற்காகத் தான் படுத்துப் புரண்டு பார்க்கிறேன்" என்று விளக்கம் தந்தான்.

குறை கூறிய மாணவர்கள் எல்லோரும் தலை கவிழ்ந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது காரியத்தின் மீது அன்பும், பிறரது விசேஷ பாகத்தின் நம்பிக்கையும் இருந்தால் ஒத்துழைப்பு தானாக வரும்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாராளுமன்ற உரைகளை பெறுமதியாக்குங்கள்

ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற நான்கு தூண்களில் சட்டத்தை இயற்றுகின்ற பாராளுமன்றம் முதன்மைக்குரியது.

அதாவது பாராளுமன்றம் என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆளுகை செய்யப்படுவது.

இவ்வாறு பாராளுமன்றத்தின் ஆளுகைக்காக மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படுகின்ற பொதுத் தேர்தலானது, ஏகப்பட்ட பணச் செலவையும் நிறைந்த மனித உழைப்பையும் உள்ளடக்கியது.

நிலைமை இதுவாக இருக்கையில், இந்த நாட்டின் ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கின்ற பாராளுமன்றத்தில்; மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கு ஆற்றுகின்ற உரைகளே பாராளுமன்றத்தின் கட்டமைப்பை ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டை பாதுகாப்பதாகும்.

எனினும் இந்த உண்மையைச் சமகாலப் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் புரிந்து கொள்வதாக இல்லை.

ஆம், ஒரு பாராளுமன்றத்தின் உன்னதமான இயங்குநிலை என்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் கைகளில் உள்ளது.

ஆயினும் தங்கள் பொறுப்பை – தாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்பதை பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் மறந்து போய்விட்டனர் போல் தெரிகிறது.

அதிலும் குறிப்பாக எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அது ஆளுந்தரப்பைச் சார்ந்தவர்களாக அல்லது எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களாக இருக்கலாம்.

அவர்கள் ஆற்றுகின்ற உரைகள் பெறுமதியானவையாக – தமிழ் மக்களுக்கு அல்லது இந்த நாட்டுக்கு பயனுடையதாக இல்லையென்ற கருத்தியல் பொதுவில் உண்டு.

ஆம், உண்மையைக் கூறுவதாக இருந்தால், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலரின் உரைகள் ஐந்து சதத்துக்குப் பெறுமதியற்றதாக இருப்பதுதான் வேதனைக்குரியது.

ஒரு காலத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுந்துநின்று பாராளுமன்றத்தில் உரையாற்றுவார்களாக இருந்தால், அந்த உயரிய அவை அமைதியாகும். அவர்களின் உரைகள் மீது ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களதும் கவனம் ஈர்க்கப்படும். அதற்குக் காரணம் அந்த உரைகள் இந்த நாட்டுக்குத் தேவையானதாக – முக்கியமான தகவல்களும் தரவுகளும் நிறைந்ததாகக் காணப்படும்.

தவிர, அன்றைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சக பாராளுமன்ற உறுப்பினர்களை விமர்சிப்பதிலோ அன்றி அவர்களை இழிவுபடுத்துவதிலோ ஒருபோதும் ஈடுபட்டிலர்.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக உள்ளது. சக உறுப்பினர்களை விமர்சிப்பதிலேயே முழு நேரமும் செலவிடப்படுகிறது.

எனவே இந்த நிலைமை முழுமையாக மாற்றப்பட்டு, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் மிகப்பெறுமதி வாய்ந்ததாக அமைவது மிக மிக அவசியமாகும்.

# தனது தோல்விகளை மறைப்பதற்காக அரசு அடக்குமுறைகளை கையாள்கின்றது

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

*(கொழும்பு)*

தற்போதைய அரசாங்கம் தனது தோல்விகளை மறைப்பதற்காக அடக்குமுறைகளைக் கையாள்வதாகவும் இத்தகைய சவால்களுக்குத் தமது கட்சி ஒருபோதும் அஞ்சப்போவதில்லை என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (13) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ள நிலையில் தற்போது தனது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள எதிர்க்கட்சியினரையும் மஹா சங்கத்தினரையும் இலக்கு வைத்து அடக்குமுறைகளை ஏவி வருவதாகவும்,

குறிப்பாக கடந்த காலப் போராட்டங்களின் போது இடம்பெற்ற வன்முறைகளைத் தூண்டியவர்கள் இன்று அதிகாரத்தில் இருந்து கொண்டு பழிவாங்கும் அரசியலில் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் விசாரணைகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் நீதிமன்றத்தின் சுதந்திரத்தை மதிப்பதாகக் குறிப்பிட்ட அதேவேளை சில அரசியல் தரப்பினர் ஊடகங்கள் வாயிலாகத் தனிப்பட்ட நபர்களைத் தண்டிக்கும் வகையில் கருத்து வெளியிடுவது தவறான முன்னுதாரணம் என்றார்.

ராஜபக்ஷர்களின் ஆட்சிக் காலத்தில் ஒருபோதும் இனவாதம் பின்பற்றப்படவில்லை என்றும் பௌத்த கலாசாரத்தைப் பாதுகாப்பது இனவாதம் ஆகாது என்றும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

தேர்தல்கள் குறித்துப் பேசிய நாமல் ராஜபக்ஷ அரசாங்கம் தேர்தல்களைக் கண்டு அச்சமடைவதாகத் தெரிவித்தார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயங்குவது ஏன்? எனக் கேள்வி எழுப்பிய அவர், எந்நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனைச் சந்திக்கத் தமது கட்சி தயாராக இருப்பதாகவும் "தாமரை மொட்டு" இளைஞர் அணியினூடாகக் கட்சியை மீளக்கட்டியெழுப்பும் பணிகள் பலமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் தபால் நிலையங்களை மூடும் அரசாங்கத்தின் தீர்மானம் மற்றும் பொதுச் சேவைகளைத் தனியார் மயப்படுத்தும் முயற்சிகளையும் அவர் கடுமையாக விமர்சித்தார். நிர்வாகத்தைச் சரியாகச் செய்யத் தெரியாதவர்கள் நிறுவனங்களை மூடுவது தீர்வாகாது எனக் குறிப்பிட்ட அவர், மக்களின் உரிமைகளுக்காகத் தமது கட்சி தொடர்ந்தும் முன்னிற்கும் எனத் தனது உரையில் உறுதிபடத் தெரிவித்தார். *(ம-7)*

## க.பொ.த (சா/த) பரீட்சார்த்திகளுக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் அறிவிப்பு

*(கொழும்பு)*

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, இதுவரை தேசிய அடையாள அட்டை விபர உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளாத தரப்பினருக்காக ஆட்பதிவுத் திணைக்களம் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.drp.gov.lk என்ற தளத்திற்குச் சென்று குறித்த விபர உறுதிப்படுத்தல் கடிதங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏதேனும் பரீட்சார்த்திகள் இருப்பின் அவர்களுக்கான தேசிய அடையாள அட்டை விபர உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்குவதற்காக மாத்திரம் இன்று (14) சனிக்கிழமை ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் காலி, குருநாகல், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள மாகாண அலுவலகக் கிளைகளை முற்பகல் 08.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை திறந்து வைக்கவும் அத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகள் எவரேனும் இருப்பின் அதிபர் அல்லது கிராம உத்தியோகத்தரினால் சான்றளிக்கப்பட்ட, முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு அத்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(ம-7)*

## சிவராத்திரி நன்னாளில் காத்தவராயன் கூத்து

*(சாந்தை)*

மஹா சிவராத்திரி நன்னாளில் சாந்தை விநாயகர் சன சமூக நிலையக்கலையரங்கில் இரவு 08.00 மணிக்கு "மாலைக்கு வாதாடிய மைந்தன்" காத்தவராயன் கூத்து நடைபெறவுள்ளது.

இராசதுரை, கஜீபன் ஆகியோரின் நெறியாளுகையின் கீழ் குறித்த கூத்தானது அரங்கேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

## திருக்கேதீஸ்வரத்தில் மஹா சனிப்பிரதோசம்

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் மஹா சனிப்பிரதோச விரத வழிபாடுகள் இன்று சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

மாலை 03.30 மணிக்கு கௌரியம்பிகை உடனுறை திருக்கேதீச்சர நாதனுக்கு விசேட அபிசேகங்கள் இடம்பெற்று தொடர்ந்து மாலை 05.00 மணியளவில் பிரதோச வழிபாடுகள் இடம்பெற்று எம்பெருமான் உள்வீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். *(ம-7)*

## யாழ். பல்கலையில் மஹா சிவராத்திரி

*(திருநெல்வேலி)*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதியுறை ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் மஹா சிவராத்திரி உற்சவமானது நான்கு சாமப் பூசைகளுடன் சிறப்புற இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் விசேட கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 22

இதன்மூலம், சோவியத் யூனிய னுக்கு பாதிப்பு கூடுதலாக இருக்கும் என்பது அவர்களுடைய கணக்கு.

துப்பாக்கி, வெடிகுண்டு என்று தொடங்கி, எலக்ட்ரானிக் சாத னங்கள், ஏவுகணைகள், இரசாயன ஆயுதங்கள் என்று பல்வேறு உதவி கள் அமெரிக்காவிலிருந்து பாகிஸ் தானுக்கும், பிறகு ஆப்கானுக்கும் இரகசிய கொரியர் சர்வீஸில் சென்று சேர்ந்தன. ஒவ்வோர் ஆண்டும் இப்படி அனுப்பப்பட்ட ஆயுதங்கள், உபகரணங்களின் எடை மட்டும் பல ஆயிரம் தொன்.

அமெரிக்கா வெறுமனே ஆயு தங்கள் அனுப்புவதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. சிஐஏ அதிகாரிகள் பலர் பாகிஸ்தானுக்குச் செல்வதற்கு சீஸன் டிக்கெட் வாங்கிக்கொண டார்கள். ஐ.எஸ்.ஐ அலுவலகத்தில் உள்ளூர்க்காரர்களை விட அதிக மாக அமெரிக்க முகங்களைப் பார்க்க முடிந்தது.

இந்த சிஐஏ அதிகாரிகளுக்கு இரண்டு பொறுப்புகள் வழங்கப் பட்டிருந்தன. ஐ.எஸ்.ஐ அதிகாரிகள், உளவாளிகள், ஒற்றர்களுக்கு அடிப் படை விடயங்களையும் நவீன தொழில் நுட்பங்களையும் சொல்லித் தருவது மற்றும் ஆப்கான் போரா ளிகளுக்கு நேரடியாகச் செய்யக் கூடிய உதவிகள், பயிற்சிகளைச் செய்து முடிப்பது.

தங்களுக்கு அமெரிக்காவின் முழு ஆதரவு, ஆசிர்வாதம் இருக் கிறது என்று தெரிந்ததும், பாகிஸ் தானுக்கும் பலம் கூடிவிட்டது. அங்கி ருந்து வரும் ஆயுதங்களைப் போரா ளிகளுக்குச் சென்று சேர்ப்பதில் ஆரம்பித்து, போர்ப் பயிற்சிகள்வரை அனைத்திலும் வேகம் கூடியது.

1979 சோவியத் யூனியன் ஆக்கி ரமிப்பு தொடங்கியபோது இத்த னூண்டு தேசமான ஆப்கானைச் சீக்கிரமாகச் சுருட்டித் தாம்பூலம் போட்டுக் கொண்டுவிடலாம் என்று தான் நினைத்துக் கொண்டிருந் தார்கள். ஆனால், ஐ.எஸ்.ஐ, சிஐஏ என்று இரண்டு வலுவான எதிரி களை அவர்கள் சந்திக்க வேண்டி யிருந்தது.

இவர்கள் நேருக்கு நேர் நின்று போரிட்டால்கூடப் பரவாயில்லை. பின்னால் நின்றுகொண்டு, ஆப்கான் புரட்சியாளர்களைத் தயார் செய்கிறார்கள். போதாக்குறைக்கு, உலகெங்கிலும் இருந்து முஸ்லீம் இளைஞர்கள் (பிரபல உதாரணம்: ஒஸாமா பின் லேடன்) ஆப்கானிஸ் தானுக்கு உதவக் கிளம்பி வந் திருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு, காடு, மலை கள் நிறைந்த ஆப்கானிஸ்தானின் புவியியல் அமைப்பால், அந் நாட்டை யாராலும் அத்தனை சுலபத்தில் முழுக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துவிடமுடியாது. யார் எங்கிருந்து தாக்குகிறார்கள் என்றே தெரியாமல் திணறிப்போய்விட்டது சோவியத் யூனியன்.



இத்தனையையும் நமுட்டுச் சிரிப்போடு பார்த்துக்கொண்டிருந்தது சிஐஏ. பனிப்போரின் உச்சத்தில், இப்படி சோவியத் யூனியனைத் தடுமாறச் செய்ததில் அவர்களுக்கு சந்தோஷம் தாங்கவில்லை.

சில மாதங்களில் முடியவேண்டிய யுத்தம், இந்தத் திரை மறைவுக் குழப்பங்களால் வருடக்கணக்காக நீடித்தது.

ஐ.எஸ்.ஐ. சிஐஏவின் உதவி பெற்ற ஆப்கான் போராளிகள். சோவியத் யூனியனுக்குக் கடுமையான நெருக் கடி கொடுத்தார்கள். அவர்கள் எத்தனை கூடுதல் துருப்புகள், ஆயுத ங்களைக் கொண்டுவந்து இறக்கி னாலும், யுத்தம் முடிகிற வழியாகத் தெரியவில்லை.

சிஐஏவைப் பொறுத்தவரை, சோவியத் யூனியனை வலுவிழக்கச் செய்யும் ஓர் உத்திதான் இது. தொட ர்ந்து பல ஆண்டுகளுக்கு யுத்தத்தில் ஈடுபடும் ஒரு தேசம், எந்த அளவு க்குத் துவண்டுபோகும் என்பதை அவர்கள் ஏற்கனவே வியட்நாம் போரில் அனுபவப்பூர்வமாக அறிந் திருந்தார்கள்.

ஆகவே, அதே தந்திரத்தைப் பயன்படுத்தி, சோவியத் யூனிய னுக்குக் கடும் சேதம் உருவாக்கத் தொடங்கியது சிஐஏ. ஆயிரக் கணக்கான சோவியத் போர் வீரர்கள் ஆப்கான் போராளிகளால் கொல்லப் பட்டார்கள். இப்படி ஒரு நீண்ட யுத்தத்துக்கான பெரும் செலவை சோவியத்தால் சமாளிக்கவே முடிய வில்லை.

முழுசாகப் பத்து ஆண்டுகள் (1979-89) நீடித்த சோவியத் யூனியன் - ஆப்கானிஸ்தான் யுத்தம் லட்சக்கணக்கானவர்களைப் பலி வாங்கியது. இந்தப் போரின் மூலம் அநாதைகளாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் பல லட்சங்களைத் தாண்டியது.

இதுதவிர, யுத்தத்தின்போது அந் நாட்டில் பதிக்கப்பட்ட கண்ணிவெடி கள், இன்றுவரை முழுவதுமாக அகற்றப்பட்டுவிடவில்லை. ஒவ்வொரு நாளும், சில அப்பாவிகளேனும் இவற்றில் சிக்கி உயிரிழந்து கொண்டி ருக்கிறார்கள்.

இப்படி ஆப்கானிஸ்தானுக்கு ஏகப்பட்ட பாதிப்புகளை உருவாக் கியபிறகும் சோவியத் யூனியனால் அவர்களை முழுமையாக ஜெயிக்க முடியவில்லை. நேரடித் தாக்குதல், கொரில்லாப் போர் என்று பல வகைகளில் ஆப்கான் போராளிகள் அவர்களை விரட்டியடித்து விட்டார் கள்.

1989 ஆண்டு, சோவியத் யூனி யன் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியது. இதனால் அதிக சந்தோஷம் அடைந்தவர்கள் ஆப் கான் போராளிகள்கூட இல்லை. ஐ.எஸ்.ஐ- சிஐஏ கூட்டணி தான்.

**என்.சொக்கன்**

சந்தேகமே இல்லை. அவர்க ளுடைய மிகப் பெரிய வெற்றி இது. இன்றுவரை, ஐ.எஸ்.ஐ, சிஐஏ ஆகிய இரு நிறுவனங்களின் சரித் திரத்திலும், ஆப்கானிஸ்தான் வெற்றி குறிப்பிடத்தக்க இடம் பிடித்தி ருக்கிறது.

ஆப்கானிஸ்தானுக்கும் முன்பும் பின்பும் சிஐஏ பல நாடுகளில் வேட்டையாடியிருக்கிறது. விளையா டியிருக்கிறது. ஆனால், இந்தமுறை சோவியத் யூனியனுக்கு மிகப் பெரிய இழப்பை உண்டாக்கிவிட்டது அவர் களுக்குத் தனிப்பட்ட சந்தோஷம்.

இதற்காக அவர்கள் பில்லியன் கணக்காக டொலர்களைச் செல வழிக்க வேண்டியிருந்தது. அதனால் என்ன? எதிரிக்கு ஒரு கண் போச்சு. நமக்கு எந்த இழப்பும் இல்லை. போதாதா? ஆப்கானிஸ்தான் யுத்தத்தின் பின்னணியில் நின்று இயங்கியதால், அமெரிக்காவுக்கு அரசியல் இலாபங்கள் அதிகம், நஷ்டங்கள் குறைவு.

ஆனால், இந்த ஆக்கிரமிப்பின் பின்விளைவாக நிகழ்ந்த ஒரு சம் பவம், உலக சரித்திரத்தையே மாற்றியமைத்துவிட்டது. அந்தச் சம்பவம், மறைமுகமாக சிஐஏவின் இருப்புக்கே ஆபத்தாக அமைந்து விட்டது.

**10, சறுக்கல்**

சோவியத் யூனியனுக்கும் நமக் கும் நடுவே உள்ள இடைவெளி, எத்தனை பெரியது? இதுதான், இரண்டு தலைமுறை அமெரிக்க ஆட்சியாளர்கள், இராணுவத்தினர், உளவுத்துறை அதிகாரிகளைப் பித்துப் பிடித்ததுபோல் அலையச் செய்த கேள்வி. இதற்கு விடை தெரியாதவரை, அவர்களால் நிம்மதியாகச் சாப்பிட, தூங்கக்கூட முடியவில்லை. அப்படியே தூங் கினாலும், இராத்திரிக் கனவுகளில் சோவியத் காம்ரேட்கள் கை நிறைய ஆயுதங்களோடு வந்து பயமுறுத் தினார்கள்.

இடைவெளி என்றால், கிலோ மீற்றர் கணக்கு அல்ல. அமெரிக் காவைக் கவலை, குழப்பத்தில் தள்ளுவதற்காகவே Bomb Gap, Missile Gap என்று வேறு பல இடைவெளிகள் இருந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லாகம் - ...

அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

கட்டுவன் - மல்லாகம் - சங்கானை (B170) உள்ள இல.6/4 பாலம் புனரமைப்புச் செய்யவுள்ளதால் மல்லாகம் சந்திக்கும் அழுக்கைச் சந்திக்கும் இடையிலான வீதி தற்காலிகமாக மூடப்படுகின்றது.

இப்புனரமைப்பு வேலையானது மூன்று மாதங்கள் நடைபெறவுள்ளதால் மாற்றுப் பாதையினை (தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில் இருந்து ஆரம்பிக்கும் 08ஆம் கட்டை வீதியினை கனரக வாகனங்கள் மற்றும் பேருந்துகள்) பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 30 கிலோ...

பெறுமதி சுமார் 105 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பாடசாலை...

பாடசாலைகளுக்கும் நேற்று முதல் எதிர்வரும் மார்ச் மாதம் 02 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதேநேரம் முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்விச் செயற்பாடுகளுக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 03ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் திறக்கப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முதலாம் தவணையின் மூன்றாம் கட்டப் பாடசாலை நடவடிக்கைகளை ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

பெப்ரவரி 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இந்தப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (ம-7)

## தமிழ் மக்களின்...

வார்த்தை முன்னெடுப்பு: ஒரு உள்ளகப் பார்வை" எனும் நூல் பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்றளவில் புதிய அரசியல் உருவாக்கத்துக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைக்கூட முன்னெடுக்கவில்லை. குறைந்தபட்சம் ஒரு கருத்தாடல் கூட இடம்பெறவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. அரசியலமைப்புத் தொடர்பில் மக்களின் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் முற்போக்கான நிலைப்பாட்டில் உள்ளார்கள்.

ஆகவே புதிய யாப்புருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் சிறந்த முறையில் வெளிப்படையாக முன்னெடுக்கலாம்.

இந்தியாவின் தலையீட்டுடன் தான் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் இந்தியா விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பங்காளியாகக் கொள்ளவில்லை.

யுத்தம் முடிவடைந்தவுடன் அந்த மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதன் பின்னர் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் அது தவறென்று பிற்பட்ட காலத்தில் உணரப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் அரசியலமைப்பின் ஊடாக முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும் என்றார். (ம-7)

## வெடுக்குநாறி...

தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்படுமென்று வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க உறுதியளித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்ற நிலையில், இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக வெடுக்குநாறியில் சிவராத்திரி வழிபாட்டுக்கு இடமளித்து, சைவ மக்களின் வழிபாட்டுரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்திய நிலையில், இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## கொழும்...

சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பத்தரமுல்லை அக்குரேகொடப் பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த தம்பதியினரை இலக்கு வைத்து நேற்று மாலை 5 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கார் ஒன்றில் வந்த குழுவினர் ரி56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தி சுமார் 10 தடவைகள் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதில் வாகனத்தில் இருந்த தம்பதியினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவ்வாறுகொல்லப்பட்டவர்கள் பிடிகல பகுதியைச் சேர்ந்த மல்வாரச்சி எனும் சட்டத்தரணியும் அவரது மனைவியும் ஆவர்.

இச்சம்பவம் குறித்து தலங்கம பொலிஸாரின் 3 குழுக்கள் உள்ளிட்ட 10 பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. (ம-7)

## யாழ்.மாநகர...

யாழ்ப்பாண நகர பழக் கடை வியாபாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மாநகர சபை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ஒருவர் யாழ்.நகரில் உள்ள பழக் கடைகள் மீது கொண்டு வரும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட பழக் கடை வியாபாரிகள், மாநகர சபை உறுப்பினர்களுக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

மஹஜன சம்பத
திகதி 2026.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 6104
B 5 7 4 0 5 0
அத சம்பத
B 4 0 5 0
சீட்டிழுப்பு இலக்கம் 0679

சுப தவசக்
திகதி 2026.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 229
விருச்சிகம் 09 24 30
8508

தன நிதானய
திகதி - 2026.02.13
சீட்டிழுப்பு இலக்கம் - 2134
D 15 51 62 80 D

மெகா பவர்
திகதி 13/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2452
G 02 09 63 68 78

ஜய
திகதி 2026.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 0372
I 5 1 0 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4346
சீட்டிழுப்பு திகதி 13.02.2026
Y 23 28 32 33
Y

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 1413
கன்னி 03 06 46 61 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள்
13.02.2026 வெற்றி வாரம் 0812
Y 6 2 1 6 6 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,222,085.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3078
சீட்டிழுப்பு திகதி 2026.02.13 தினம் வெள்ளிக்கிழமை
31 38 43 73 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,118,106.40

சனிதா
13.02.2026 வெற்றி வாரம் 5239
18 41 70 79 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,477,030.40
செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/-

சசிரி
வெற்றி வாரம் 908
சீட்டிழுப்பு திகதி 13.02.2026
வெள்ளிக்கிழமை
24 26 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,636,040.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4790
சீட்டிழுப்பு திகதி 13.02.2026 தினம் வெள்ளிக்கிழமை
15 46 48 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,047,434.80

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 27 10 13 16 32
2254
13.02.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.628,508,160.80

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2904
சீட்டிழுப்பு திகதி 2026.02.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,324,416.00
07 16 63 65 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த பொதுக் கூட்டம் - 2026
## பழைய மாணவர் சங்கம்
## யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி

காலம் :- 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மு.ப 09.30 மணி
இடம் :- அருணாசலம் மண்டபம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு தயவாக வேண்டப்பெறுகின்றீர்கள்.

குறிப்பு:- 2026ம் ஆண்டுக்குரிய பழைய மாணவர் சங்க நிர்வாகத்திற்குரிய பதவியணியினரின் வேட்புமனு விண்ணப்பங்கள் (15.02.2026 - 27.02.2026 வரையான காலப்பகுதியில் அலுவலக நேரத்தில்) கல்லூரியில் அதிபர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
பழைய மாணவர் சங்கம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
(C-4995)

# மோ.சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து நிலாவரை நோக்கிச் செல்லும் வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த வீதியூடாக அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிலில் பயணித்தவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் குறித்து விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,104)

## காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி காட்டுகந்தோர் வீதியில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
(6829)
தொடர்புகளுக்கு:
070 580 0300
076 135 4276

## மாப்பிள்ளை தேவை

01.அனலைதீவு, இந்து, 2000, கேட்டை, O/L, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54407)
02.சண்டிலிப்பாய், இந்து, 1987, உத்திரட்டாதி, Business Managment, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(57038)
03.மீசாலை, இந்து, 1993, சதயம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(56429)
04.குப்பிளான், இந்து, 1997, கேட்டை, Lawyer, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55147)
05.சுதுமலை, இந்து, 1991, விசாகம், Bsc BSCN, Canada Citizzen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55115)
06.மாதகல், இந்து, 1990, திருவோணம், BBA, Germany & Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54542)
07.கந்தர்மடம், இந்து, 1988, ரோகிணி, Bsc Biomedical, ACCA, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54136)
08.காரைநகர், இந்து, 1992, சித்திரை, Phd, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54115)
09.காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், AAT, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(55026)
10.மாவிட்டபுரம், இந்து, 1985, ரேவதி, A/L, Manager, Uk Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54067)
(C-4996)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
074 387 3686

## BABU TILES WORKS
### மாபிள் பதித்தல்

அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் மாபிள் வேலை செய்தவரால் குறுகிய காலத்தில் பழைய மற்றும் புதிய வீடுகளுக்கு ஏற்றவகையில் மாபிள் பதித்துத்தரப்படும்.
(6830)
தொடர்பு:077 382 4871

## வீடு வாடகைக்கு தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:
(6834)
076 408 6163

## ஆதிசிவன் ஆலயம்
### தொல்புரம் கிழக்கு - சுழிபுரம்
## மஹா சிவராத்திரி - 2026
15.02.2026 ஞாயிற்றுக்கிழமை



சிவனுக்குரிய சிவராத்திரி விரதம் 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை எமது ஆலயத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம் : ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ ஆதிசிவ குகன் குருக்கள்

**ARP ஜோதிடம்**
உங்கள் வாழ்க்கைக்குரிய வழிகாட்டும் துல்லியமான பலன்கள், ஜாதகம் எழுத பலன் பார்க்க தொடர்பு கொள்ளுங்கள்.
074 369 2974, 077 213 3694, 077 614 0849
(2046)

## விற்பனைக்கு

கல்வியங்காட்டுச் சந்தி, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் காணி, வீடு, கடை விற்க வாங்கவுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(6836)
076 311 9485

### இலங்கையில் இருந்து கனடாவிற்கு
### கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY 2-3 Months
எமது நேரடி கிளைகள்
(C-4993)
V2 TRAVELS 076 822 6244 076 455 0672

## வேலையாட்கள் தேவை

நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள பிரபல மில் ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
❑ அருகில் உள்ளோருக்கு முன்னுரிமை
(C-4994)
தொடர்புகளுக்கு: 076 710 3442

## பணியாளர் வெற்றிடம்

01. மேற்பார்வையாளர்
02.இரவு காவலாளிகள்
03.அலுவலக உத்தியோகஸ்தர்கள்
04.சாரதி
05.முதியோர் இல்லத்திற்கான உதவியாளர்
06.தோட்டப் பராமரிப்பாளர்

கோண்டாவில்
021 222 7938
sivapoomi@gmail.com
(C-4991)
நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை.

## சிவபூமி திருவாசக அரண்மனை
## சிவராத்திரி விழா
### நாவற்குழி

காலம் : 1502.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 6 மணி முதல் 16.02.2026 காலை 6 மணி வரை 108 சிவலிங்கப் பெருமானுக்கு பக்தர்கள் தமது கரங்களால் வழமை போல் அபிஷேகம் செய்யலாம்.



- சிவதெட்சணாமூர்த்தி பெருமானுக்கு விசேட ஆறுகாலப் பூஜை இடம்பெறும்.
- திருவாசக அரங்கத்தில் இந்து கலாசாரத் திணைக்களத்தின் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறும்.

அனைவரும் வருகை தந்து நல்லருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



(C-4992)
நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 194/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= | Max 3 Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 230/= | Max 3 Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 195/= | Max 5Kg |
| 1Kg கடலை | - 335/= | Max 3kg |
| 1Kg சோயா | - 250/= | |
| 10Kg விசிதா நாடு அரிசி | - 2670/= | ~~3000/=~~ |
| 1Kg குத்தரிசி ஆட்டக்காரி | - 265/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை | - 220/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 399/= | ~~480/=~~ |
| 01 மலிபன் பால்மா | - 1120/= | ~~1150/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 285/= | ~~330/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 40/= | ~~70/=~~ |









தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.
(2050)
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org